**நவம்பர் - 28**

**"அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்." - யோபு 34.30.**

கடலின் மேல் திடீரென்று அடிக்கும் புயலைப்போல ஆத்துமாவில் எழும்புகிற கலகங்களின் மத்தியில் "சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிற" அவரேயல்லாமல் யார் சமாதானத்தைக் கெடுக்கக் கூடும்? சமுத்திரத்தில் ஆபத்தில் சிக்கியிருக்கிற மாலுமிகளைப்போல, நாம் அவரை நோக்கிக் கூப்பிடுகிறோம். அப்பொழுது அவர் நாம் விரும்பின அடைக்கல ஸ்தானத்தில், நம்மைக்கொண்டு போய்ச் சேர்க்கிறார். பாக்கியமுள்ள அந்த அடைக்கல ஸ்தானத்தில், அதாவது தேவனில் பெறுகிற அமைதியின், சமாதானத்தின் அடைக்கல ஸ்தானத்தில், சமாதானத்தின் இந்த உத்தரவை கொண்டுவருகிற கூப்பிடுதல் என்ன? குழப்பத்திற்காகவுள்ள எல்லா சந்தர்ப்பங்களும் அகற்றப்பட வேண்டுமென்பதற்காக இது ஒரு ஜெபம் அல்ல. ஏனென்றால், மானிட ஆவிக்கு அந்த வழியில் சமாதானத்தைக் கொண்டு வருவது எப்பொழுதும் தெய்வீக சித்தமாயிருக்கிறதில்லை. எப்பொழுதும் இது மிகச் சிறந்த வழியுமல்ல ஒருவரையும் "கலங்கப்பண்ணகூடாத" அமைதியைக் கொண்டுவர ஒரு போதும் தவறாத ஒரு கூப்பிடுதல் உண்டு. அதுதான் தேவனுடைய சித்தத்தில் இன்பமான நம்பிக்கையுள்ள, அன்புள்ள சம்மதத்திற்காகவுள்ள ஒருஜெபம்.
**- Z '96, 259 (R 2058).**

யோபுவின் மற்ற மூன்று வாக்குவாதம் செய்கிறவர்களைப் போல எலிகூவும், யோபு கொண்டிருந்த தெய்வீக ஏவுதலில் குறைவுள்ளவனாயிருந்தான். ஆனாலும், எலிகூவின் பிரசங்கத்தில் மிகவும் அதிகமான ஞானத்தைப் பார்க்கிறோம். ஆபிரகாமின் சமகாலத்தவனான அவன், குரங்கிலிருந்து தோன்றவில்லை என்று பரிணாமவாதக்காரர் இன்னமும் அடைந்திராத ஒரு ஞானத்தை உடையவனாயிருந்தான். நமது மூல வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற விஷயம் ஏவப்பட்டு எழுதப்படவில்லை. என்றாலும், இது உண்மையான சொல். ஏனென்றால், தேவன் தனது சொந்த ஜனங்களுக்கு மற்றவர்கள் அழிக்கக்கூடாத சமாதானத்தை நிச்சயமாகத் தருகிறார். உலகம் அறியாததும், கொடுக்கக்கூடாததும், எடுக்கக் கூடாததுமான இந்த சமாதானம் அவர் பேரில் உள்ள நிறைவான விசுவாசத்திலிருந்தும், அவரோடும் அவருடைய குணம், ஏற்பாடு, வேலைகள் இவைகளோடு கொண்டுள்ள ஒரு இருதயத்தின் இணக்கத்திலிருந்தும் பாய்கிறது. அவருடைய ஆணையினாலே கட்டப்பட்ட வாக்குத்தத்தத்திலும், யேசுவின் பிரதான ஆசாரிய வேலையிலும், பரிசுத்த ஆவியை உடையவர்களாயிருப்பதிலும் பாத்திரமாயிருக்கிறதினால் அவர்கள் இப்பொழுது இருக்கிற உபத்திரவங்களுக்கு மேலாக எழுந்து, இவ்விதமாக அவர்கள் எல்லாப் புத்திக்கும் மேலானதாயும், தங்களுடைய இருதயங்களையும், தங்களுடைய சிந்தைகளையும் கிறிஸ்து யேசுவுக்குள்ளாக அவரோடு நித்திய ஜீவனுக்குக் காத்துக் கொண்டிருக்கிறதுமான தேவ சமாதானத்தை அனுபவிக்கிறார்கள். **- P '35, 171, 172.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஏசா 26:3; ரோம 8:31; பிலி 4:7; சங் 1:1,2; 4:8; 25:12,13; 29:11; 85:8; 119:165; லூக் 1:79; 2:14; யோவா 14:27; 16:33; ரோம 2:10; 5:1; 8:6.**

**கோபுர வாசிப்பு : Z '16, 101 (R 5878).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதற்கு உதவியாக இருந்தது எது? இடையூறாக இருந்தது எது? அது எதில் முடிந்தது?**